
## திராவிடத்தால் வாழ்கிறோம்

989

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

85

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**



ஓவியம் : சிகரன்

## எளியோருக்குக் கிடைத்த அரசியல் அடையாளம்!

திராவிட முன்னேற்றக் கழகம் செல்வந்தர்களால் வளர்ந்த இயக்கம் அல்ல, சாமானியர்களின் உழைப்பால் வளர்ந்த இயக்கம்; இயக்கம் தொடங்கப்பட்ட ஓராண்டுக்குள்ளேயே ஒரு மாவட்டக் கழகத்தின் உழைப்பை, மற்றொரு மாவட்டக் கழகம் விஞ்சும் வண்ணம், ஒரு தொண்டரின் உழைப்பை மற்றொரு தொண்டர் விஞ்சும் வண்ணம் கழகம் ஆரோக்கியமாக வளர்ந்தது. அப்படி உழைத்த தொண்டர்களை அரவணைத்து, அங்கீகாரப்படுத்தினார் அண்ணா. ஏட்டுக்கல்விகூட முடித்திராத கடைக்கோடித் தொண்டர்களின் பெயர்களையும், திராவிட நாட்டில் அச்சிலேற்றி அவர்களை அடையாளப்படுத்தினார்.

குறிப்பாக, 10.06.1950 அன்று மதுரை மாவட்டம், சோழவந்தானில் தி.மு.கழகத்தின் ஐந்தாவது மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில், இரண்டு நாட்களிலும் பல்லாயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் நிரம்பி வழிந்தனர். கே.கே.நீலமேகம் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். ஈ.வி.கே.சம்பத் தலைமை தாங்கினார். ஆவுடையப்பன் வரவேற்புரை நிகழ்த்தினார். மாநாட்டுச் செயலாளராக அழகரடி எஸ்.முத்து, துணைச் செயலாளராக என்.முத்து, விளம்பரச் செயலாளராக மதுரை அய்யாச்சாமி, விளம்பர உறுப்பினராக மதுரை சேதுராமன் ஆகியோர் செயல்பட்டனர்.

மாநாடு தொடங்கும் முன்பாக, நாகூர் ஹனிபாவின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. திருவாரூர் நமச்சிவாயம் இசைக் குழுவினரும் நிகழ்ச்சியும் மக்களுக்கு விருந்து படைத்தது. மாநாட்டின் முதல் நாள் இரவு மதுரை அழகரடி வேலாயுதம் நினைவுப் படிப்பகத்தாரால் ‘சிலை’ என்ற நாடகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. மறுநாள் நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.இராமசாமியின் ‘சந்திரமோகன்’ நாடகம் நடைபெற்றது.

மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட உரைகள் குறித்த விவரங்கள், ‘திராவிட நாடு’ இதழில் பதிவாகவில்லை. ஆனால், முன்னணி நிர்வாகிகளுடன் இணைந்து மாநாட்டிற்காக உழைத்த எளிய தொண்டர்கள் அடையாளப்படுத்தப் பட்டனர். “மதுரை ராஜமான், சோழவந்தான் பழனியாண்டவர், தேனி செல்லையா, மதுரை பிச்சை, முத்தியாலு, மாரி, ரங்கசாமி, மணி உள்ளிட்ட கழக களப்பணியாளர்களையும் பாராட்டிய அண்ணா, “இத்தகைய தொண்டர் சேவைகளையும், மட்டிலா ஆர்வத்தையும் காண நம் இதயம் பெரு மகிழ்வால் விம்மியது. ‘இயக்கக் கொள்கைகள் ஏன் வளராது? மக்கள் ஏன் நம் கருத்தைக் கேட்க ஆர்வம் காட்ட மாட்டார்கள்? இத்தகைய வீர மணிகள் நம் கழகத்தின் தூதுவர்களாக நாலா பக்கங்களிலும் உலவும்போது!’ என்ற நினைப்பு இதயத்தில் மின்னியது” என்று பாராட்டினார் அண்ணா.

‘இந்தப் புதுநிலை வேகமாக வளர வேண்டும். சண்டமாருத வேகத்தில் இன்னும் அதிகமாக நமது பணிகள் நடைபெற வேண்டும். நாடெங்கும் மேலும் அதிகமான கிளைக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும்’ என்று மதுரை மாநாட்டை முன்னுதாரணமாக வைத்து அறிவுரைகளும் வழங்கினார்.

“வளர்ந்து வரும் நமது கழகத்தின் வெற்றிக்கு ஒரு எடுத்துக்காட்டு மதுரை மாவட்ட மாநாடு” என மாநாட்டின் எழுச்சியை துல்லியமாகப் பதிவு செய்தது ‘திராவிட நாடு’. “நாம் பணபலமடைந்தோர் அல்ல, பணம் பெருத்தான்களும் நம்மிடம் கிடையாது. ‘கேள், தருகிறேன்’ என்று கொடுக்கும் பணக்காரர்களும் கிடையாது. எனினும், வளர்ந்திருக்கிறோம். முடியாதவைகளைச் சாதித்து வருகிறோம். மக்களின் மகத்தான ஆதரவால்” என மதுரை மாநாட்டுடன் சேர்த்து, கழகம் தொடங்கப்பட்ட ஓராண்டுக்குள்ளாகவே நடைபெற்ற ஐந்து மாநாடுகளின் வெற்றியையும் பறைசாற்றி பெருமைப்பட்டார் அண்ணா.

**...கூட்டம் திரளும்**

## கலைஞரின் டி.வி. - நினைவின் ஒளி!



தமிழ்நாட்டில் சமூக அறிவு மற்றும் பொழுதுபோக்கு அனுபவத்தில் பெரும் புரட்சியை நிகழ்த்திய திட்டம் ‘கலைஞர் வண்ணத் தொலைக்காட்சித் திட்டம்’. 2006-ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சிக் காலத்தில் 72 லட்சத்துக்கும் அதிகமான குடும்பங்கள் இத்திட்டத்தால் பயன்பெற்றன. அதில் ஒரு தொலைக்காட்சி 20 ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, தனது முகநூலில் பதிவு செய்திருக்கிறார் சிவகங்கை மாவட்டக் கழகச் சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.எ.வல்லபாய்.

“சென்னைக்கு ஒரு வேலையாக சென்றிருந்த நான், டெய்லர்ஸ் சாலையில் உள்ள ஒரு பழக்கடையில் பழம் வாங்கச் சென்றிருந்தேன். பழைய கருப்பு நிற கலைஞர் இலவச வண்ண தொலைக்காட்சி இன்னும் அங்கு இயங்கிக் கொண்டிருந்தது. என் மகனை அழைத்து, அந்த டிவியை காட்டியதும், ‘அப்பா, இது எந்த மாதிரி டி.வி?’ என்று ஆச்சரியமாகக் கேட்டான். அவனுக்கு தெரிந்த டி.வி என்றால், மெல்லிய எல்.இ.டி. ஸ்கிரீன்தான்.

நான் சிரித்துக் கொண்டே, ‘இதுதான் கலைஞர் இலவச வண்ண தொலைக்காட்சி. எங்களுடைய தலைமுறைக்கு இது ஒரு ஜன்னல் போல உலகத்தைத் திறந்தது’ என்றேன்.

அவனுக்குப் புரியவில்லை. ‘அந்த காலத்தில் டி.வி வாங்குவது எல்லாராலும் முடியாது. அதனால் டி.வி வைத்திருந்த சிலர் வீட்டுக் கதவுக்குப் பின்புறம் நின்று, நண்பர்களோடு சேர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்ப்போம். அந்த ஒளிக்கதிர்கள், எங்களுக்கு மகிழ்ச்சியையும், கனவுகளையும் கொடுத்தன என்றேன். மகன் சிரித்தான். ‘அப்பா, அதெல்லாம் ரொம்ப பழைய விஷயம் போல இருக்கு!’ என்றான்.

‘பழையதுதான், ஆனால், கலைஞர் டிவி மூலம் தமிழ்நாட்டின் ஆயிரக்கணக்கான மாணவர்கள் முதன்முதலில் கணினி, கல்வி, உலகம் என்பனவற்றை அறிந்தார்கள். பறவையின் இறக்கைகளைக் காணாமல் வானூர்தி படைக்க முடியாது. அதுபோல அந்த டிவிதான் எங்கள் தலைமுறையின் இறக்கை’ என்றேன். ‘கலைஞர் தாத்தா செம சூப்பர் பா’ என்றான். அதன் சிறிய திரையில் இன்னும் ஒளி மிளிர்ந்தது. ‘அந்த ஒளி வெறும் டிவியின் ஒளி இல்லை. ஒரு தலைமுறையை முன்னேற்றிய ஒளி.” என்கிறது அந்தப் பதிவு.

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

85

**சுயமரியாதை-சமத்துவம்- சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## கழகம் ஒரு குடும்பம்!

நீதிக்கட்சி - சுயமரியாதை இயக்கம்- திராவிடர் கழகம்- திராவிட முன்னேற்றக் கழகம் என காலம் காலமாக, தலைமுறை கடந்தும் கொள்கை தொடர்ச்சி இருப்பதால், திராவிட இயக்கம் இன்றைக்கும் நிலைத்து நிற்கிறது. வெறும் கொள்கை சார்ந்த உணர்வாக மட்டுமின்றி, குடும்பங்கள் கடைபிடிக்கும் கோட்பாடாகவும் இருப்பதால், இவ்வியக்கம் நிலைபெற்றுள்ளது.

ஆனால், இப்படியான திராவிட இயக்க பாரம்பரியம் கொண்ட தனிநபர்களின் வரலாறே பெரிய அளவில் பதிவு செய்யப் படாமல் இருக்கும்பட்சத்தில், குடும்பங்களின் வரலாற்றைப் பதிவு செய்து வெளியிடுவது அரிதினும் அரிதான காரியம்.




அப்படி திராவிட இயக்க சிந்தனையை உரமாகக் கொண்டு சுயமரியாதை இயக்க பாரம்பரியத்தில் பகுத்தறிவு நெறியைக் கடைபிடித்து உயர்ந்த குடும்பம் அரு. பெரியண்ணன் அவர்களுடையது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் உற்ற நண்பராக விளங்கி, அவரது நூல்களை எல்லாம் அச்சிட்டு வெளியிட்ட பெருமைக்குரியவர் பெரியண்ணன் அவர்கள்.

மிசா காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர்- முரசொலி மாறன் ஆகியோருக்குத் துணை நின்று, முரசொலி நாளிதழின் பொது மேலாளராக சிறப்பாகப் பணியாற்றிய பெரியண்ணன் அவர்களின் குடும்ப வரலாற்றைப் பல்வேறு சுவாரசியமான தகவல்களுடன் ‘பெரியண்ணன்: எழுதப்படாத வரலாறு’ எனும் தலைப்பில் நூலாக்கியுள்ளார், அவரது பெயரன் கார்த்தி சிதம்பரம். தெய்வானை பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

பேசியும் எழுதியும் வளர்ந்த திராவிட இயக்க வரலாற்றின் ஆரம்ப காலத்தில், பெரிய அளவிலான இதழ்கள் வெளியாகாத காலத்தில் திராவிட இயக்க சிந்தனைகளை இலக்கிய வடிவில் பரப்ப உருவெடுத்தது ‘பொன்னி’ இதழ். 1947-ஆம் ஆண்டு முருகு சுப்பிரமணியத்துடன் இணைந்து, செந்தமிழ் பதிப்பக வெளியீடாக இவ்விதழை நடத்தியவர் பெரியண்ணன் அவர்கள். வண்ண முகப்பு அட்டையுடன் சிறப்பான தயாரிப்பில் வெளிவந்தது பொன்னி.

அதைப்போலவே தமிழர் திருநாளான பொங்கலன்று சிறப்பு மலர் வெளியிட வேண்டும் என்ற ஒரு வழக்கத்தை, முதன்முதலில் தொடங்கி வைத்தது பொன்னி இதழ்தான் என்பது போன்ற அரிய தகவல்கள் இந்நூலை சுவாரசியமான ஒன்றாக ஆக்கியிருக்கின்றன.

பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள் என்று அறியப்பட்ட கவிஞர்கள் பற்றிய சிறு குறிப்பும், 47 பெயர்கள் அடங்கிய பட்டியலும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. போலவே பெரியண்ணன் அவர்கள் முரசொலியில் நுழைந்து நிர்வாக ரீதியாக ஏற்படுத்திய முக்கியமான மாற்றங்களையும், அவர் மீது கலைஞர் கொண்டிருந்த மதிப்பையும் இந்நூல் ஆசிரியர் அவர்கள் பதிவு செய்துள்ளார்.

எளிமை, பொறுமை, அமைதி ஆகிய நற்பண்புகளைக் கொண்டு அவர் தன்னுடைய குடும்பத்திலும் தன்னைச் சுற்றியிருக்கும் சமூகத்திலும் ஏற்படுத்தியிருக்கும் மாற்றங்கள், திராவிட இயக்கத்தவர் அனைவரும் மனங்கொள்ள வேண்டியவை.

திராவிட இயக்க இதழியல் வரலாற்றில், முக்கிய ஆளுமைகளுள் ஒருவரான, நூற்றாண்டு காணும் அரு.பெரியண்ணன் அவர்களின் பணிகளை குடும்பப் பின்னணியுடன் அறிந்துகொள்ள இன்றியமையாதத் தொகுப்பாக வெளியாகி இருக்கிறது இந்நூல்.

**...வாசிப்போம்.**

## ஃப்ளாஷ்பேக்



கு.வாஞ்சிநாதன்



### தலைவருடன் பெற்றோர் எடுத்துக் கொண்ட படம்!

கடலூர் கழக மூத்த முன்னோடி உடன்பிறப்புகளான எனது பெற்றோர் பா.குழந்தைவேல் - கல்யாணி அவர்களின் திருமண நாளையொட்டி, 2000-வது ஆண்டில், அண்ணா அறிவாலயத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்து பெற்றனர். எனது தந்தை என்னையும் தங்கையையும் அறிமுகப்படுத்தினார்கள். என் பெரிய மகன் வாஞ்சிநாதன் என்றவுடன், ‘கலெக்டர் ஆஷ் துரையை சுட்டுக் கொன்ற வாஞ்சிநாதனா?’ என தலைவர் நகைச்சுவையுடன் குறிப்பிட்டார். பெற்றோருடன் தலைவர் கலைஞர் அவர்களைச் சந்தித்த இந்த நிகழ்வு என்றென்றும் மறக்க முடியாதது. எங்கள் குடும்பத்தினருக்கு மிக நெருக்கமான படம்.

**- கு.வாஞ்சிநாதன்,**
**தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளர், கடலூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### சிறையில் தாக்குதல்!

1962-இல் விலைவாசி உயர்வுக்கு எதிராக, சென்னையில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில், 4,000 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். சிறையில் கழகத்தினர் மீது கொடும் தாக்குதல் நடத்தப்பட்டது. மறியலில் கலந்துகொண்டதற்காக வருத்தமும், மன்னிப்பும் எழுதிக் கொடுத்துவிட்டு, விடுதலை பெறுமாறு பணித்தனர். மிரட்டலுக்கு இணங்காதவர்களை மீண்டும் துன்புறுத்திச் சிறையில் அடைத்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131